# ஒருங்கிணைந்த இளமறிவியல் மாணவர் சேர்க்கை 2025 - 2026

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

## மற்றும்

## அண்ணாமலைப் பல்கலைக்கழகம் (வேளாண்மைப் பிரிவு)

******

இந்த கல்வியாண்டில், ஒரே இணையதள விண்ணப்பம் வழியாக,

| |
|---|
| தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் , |
| • 14 இளமறிவியல் பாடப்பிரிவுகளுக்கும்<br>• 3 பட்டயப்படிப்புகளுக்கும்<br>மற்றும் |
| அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் பிரிவில்,<br>• 3 இளமறிவியல் வேளாண் பாடப்பிரிவுகளுக்கும்<br>மாணவர் சேர்க்கை நடைபெற உள்ளது. |

# இணையதள விண்ணப்பம்

| | | |
|---|---|---|
| ஆரம்ப தேதி | : | 09.05.2025 |
| பூர்த்தி செய்த விண்ணப்பம் சமர்ப்பிக்க கடைசி தேதி | : | 08.06.2025 |

இணையதள முகவரி : http://tnau.ucanapply.com

## மாணவர் சேர்க்கை விவரங்கள் : இளமறிவியல் பாடப்பிரிவுகள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் **இளமறிவியல் பாடப்பிரிவுகளில்** மொத்தம் 6921 இடங்கள் (அரசாங்க கல்லூரிகளில் 2516 இடங்களும், தனியார் கல்லூரிகள் 4405 இடங்களும்) இந்த கல்வியாண்டில் நிரப்பப்பட உள்ளன.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் **இளமறிவியல் பாடப்பிரிவுகளில்** மொத்தம் 340 இடங்கள் இந்த கல்வியாண்டில் நிரப்பப்பட உள்ளன.

**மாணவர் சேர்க்கை விவரங்கள் : பட்டயப்படிப்புகள்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் **பட்டயப்படிப்புகளில்** மொத்தம் 1240 இடங்கள் (அரசாங்க கல்லூரிகளில் 450 இடங்களும், அரசாங்க உதவி பெறும் கல்லூரிகள் 150 இடங்களும், தனியார் கல்லுரிகள் 640) இந்த கல்வியாண்டில் நிரப்பப்பட உள்ளன.

**சிறப்பு இடஒதுக்கீடுகள்**

1. **7.5% அரசு பள்ளியில் பயின்ற மாணவர்களுக்கான இடஒதுக்கீடு :** மொத்தம் 403 இடங்கள் (**அரசு கல்லூரிகள் : 190, தனியார் கல்லூரிகள்: 213** ) ஒதுக்கப்பட்டுள்ளது.

2. **தொழில்முறைக் கல்வி பாடப்பிரிவினருக்கான இடஒதுக்கீடு (Vocational):** நிர்ணயிக்கப்பட்ட இடங்களில் ஐந்து சதவீத இட ஒதுக்கீடு: மொத்தம் 223 இடங்கள் (**அரசு கல்லூரிகள் : 94, தனியார் கல்லூரிகள்: 124** )

3. **மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு இடஒதுக்கீடு :**

   அரசாங்க கல்லூரிகளில், மட்டும் நிர்ணயிக்கப்பட்ட இடங்களில் ஐந்து சதவீத இட ஒதுக்கீடு (மொத்தம் 128 இடங்கள்)

4. **சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான இடஒதுக்கீடு:** அரசாங்க கல்லூரிகளில் மட்டும் மொத்தம் 20 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

5. **முன்னாள் இராணுவ வீரர்களின் வாரிசுகளுக்கான இடஒதுக்கீடு :**

   அரசாங்க கல்லூரிகளில் மட்டும் மொத்தம் 20 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

## புதிய பாடப்பிரிவுகள்

வளர்ந்து வரும், நவீன வேளாண்மையில் இன்றியமையாத அங்கங்களான இயந்திரமயமாக்கல், வேளாண்மையில் கணிணி அறிவியல், செயற்கை நுண்ணறிவு மற்றும் எந்திர கற்றல் அகிய தொழில்நுட்பங்களை மாணவர்களுக்கு கற்பிக்கும் வகையில் கடந்த இரண்டு கல்வியாண்டுகளாக " உயிர்த் தகவலியல் "(Bioinformatics) மற்றும் " வேளாண்மை தகவல் தொழில்நுட்பம்" (Agricultural Information Technology) ஆகிய பட்டப்படிப்புகள் தொடங்கப்பட்டு உள்ளன.

இந்த பாடத்திட்டங்களின் மூலம் வேளாண்மையில் கணிணியின் பயன்பாடுகள், இயந்திரமயமாக்கல், சென்சார் பயன்பாடு ஆகியவை மேம்படும்.

## விண்ணப்ப கட்டணம்

| |
|---|
| பொதுப்பிரிவு(OC), பிற்படுத்தப்பட்டோர் (BC) மற்றும் பிற்படுத்தப்பட்டோர் (இஸ்லாமியர்) BC(M) மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் MBC/DNC மாணவர்களுக்கு ரூபாய்: 600/- <br> மற்றும் |
| ஆதிதிராவிடர் (SC), அருந்ததியர் (SCA) மற்றும் பழங்குடியினர் (ST): ரூபாய். 300/- |

# ஒருங்கிணைந்த இளமறிவியல் மாணவர் சேர்க்கை 2025 - 2026

## மாணவர் சேர்க்கை தொடர்பான முக்கியமான நாட்கள்

| | | |
|---|---|---|
| விண்ணப்பித்திற்கான ஆரம்ப நாள் | : | 09.05.2025 |
| விண்ணப்பித்திற்கான கடைசி நாள் | : | 08.06.2025 |
| தரவரிசைப்பட்டியல் வெளியீடு | : | சூன் மாதம் கடைசி வாரம் |
| உத்தேச முதற்கட்ட சிறப்பு இடஒதுக்கீட்டிற்கான நேரடி கலந்தாய்வு | : | சூலை மாதம் முதல் வாரம் |
| உத்தேச முதற்கட்ட இணையவழி பொது கலந்தாய்வு | : | சூலை மாதம் இரண்டாவது (அ) மூன்றாவது வாரம் |

**மேலும் விவரங்களுக்கு**

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர்.**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக கல்வி பாடங்களுக்கான விவரங்களை 9488635077, 9486425076 என்ற அலைபேசி எண்களிலும் மின்னஞ்சல் (email) : ugadmissions@tnau.ac.in மூலமாகவும் வாரநாட்களில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 5 மணிவரை தொடர்புகொள்ளலாம்.

**அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ( வேளாண்மைப் பிரிவு)**

அண்ணாமலைப் பல்கலைக்கழக கல்வி பாடங்களுக்கான விவரங்களை 9865703537 மற்றும் 9442029913 என்ற அலைபேசி எண்களிலும், மின்னஞ்சல் (email) : agridean2015@gmail.com மூலமாகவும் வாரநாட்களில் காலை 10.00 மணியிலிருந்து மாலை 6 மணிவரை தொடர்புகொள்ளலாம்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இளமறிவியல் பாடப்பிரிவுகள்

1. இளமறிவியல் (மேதமை) வேளாண்மை
2. இளமறிவியல்(மேதமை) தோட்டக்கலை
3. இளமறிவியல் (மேதமை) வேளாண்மை (தமிழ்வழி)
4. இளமறிவியல் (மேதமை) தோட்டக்கலை (தமிழ்வழி)
5. இளமறிவியல் (மேதமை) வனவியல்
6. இளமறிவியல் (மேதமை) உணவு, மற்றும் ஊட்டச்சத்து உணவு முறை
7. இளமறிவியல் (மேதமை) பட்டுவளர்ப்பு மற்றும்
8. இளமறிவியல் (மேதமை) வேளாண் வணிக மேலாண்மை
9. இளம் தொழில்நுட்பம் (வேளாண் பொறியியல்)
10. இளம் தொழில்நுட்பம் (உணவுத் தொழில்நுட்பம்)
11. இளம் தொழில்நுட்பம் (உயிரித் தொழில்நுட்பம்)
12. இளம் தொழில்நுட்பம் (ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல்)
13. இளம் தொழில்நுட்பம் (உயிரித் தகவலியல்) மற்றும்
14. இளம் தொழில்நுட்பம் (வேளாண்மை தகவல் தொழில்நுட்பம்)

## அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வேளாண்மைப் பிரிவின் இளமறிவியல் பாடப்பிரிவுகள்

இளமறிவியல் (மேதமை) வேளாண்மை – அரசு உதவி

இளமறிவியல் (மேதமை) வேளாண்மை - சுயசார்பு

இளமறிவியல்(மேதமை) தோட்டக்கலை

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பட்டயப்படிப்புகள்

வேளாண்மை (அரசாங்க மற்றும் தனியார் கல்லூரிகளில் வழங்கப்படுகிறது)

வேளாண்மை (தமிழ் வழி) ( அரசாங்க கல்லூரி மட்டும்)

தோட்டக்கலை (அரசாங்க மற்றும் தனியார் கல்லூரிகளில் வழங்கப்படுகிறது)

வேளாண்மை பொறியியல் (அரசாங்க கல்லூரி மட்டும்)

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

**தமிழ் வழிக்கல்வியில் பயிலும்** மொத்த மாணவர்களின் எண்ணிக்கை விவரங்கள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 2021-2022ஆம் கல்வியாண்டு முதல் 2024-2025 கல்வியாண்டு வரை மொத்தம் **367 மாணவர்கள்** (வேளாண்மை 188 : தோட்டக்கலை 179) **தமிழ் வழிக்கல்வியில்** பயின்று வருகின்றனர்.

| வ. எண் | ஆண்டு | கல்லூரி | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 2021-2022 | இளமறிவியல் (மேதமை) வேளாண்மை | 47 |
| | | இளமறிவியல் (மேதமை) தோட்டக்கலை | 47 |
| 2 | 2022-2023 | இளமறிவியல் (மேதமை) வேளாண்மை | 50 |
| | | இளமறிவியல் (மேதமை) தோட்டக்கலை | 47 |
| 3 | 2023-2024 | இளமறிவியல் (மேதமை) வேளாண்மை | 48 |
| | | இளமறிவியல் (மேதமை) தோட்டக்கலை | 49 |
| 4 | 2024-2025 | இளமறிவியல் (மேதமை) வேளாண்மை | 43 |
| | | இளமறிவியல் (மேதமை) தோட்டக்கலை | 36 |
| | | மொத்தம் | 367 |

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

## 7.5% ஒதுக்கீட்டின் கீழ் பயன் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை விவரங்கள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 2021-2022ஆம் கல்வியாண்டு முதல 2024-2025 கல்வியாண்டு வரை மொத்தம் 1355 மாணவர்கள் 7.5% ஒதுக்கீட்டின் கீழ் பயன் பெற்று வருகின்றனர்.

| வ. எண் | ஆண்டு | கல்லூரி | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 2021-2022 | உறுப்புக் கல்லூரி | 134 |
| | | இணைப்புக் கல்லூரி | 162 |
| 2 | 2022-2023 | உறுப்புக் கல்லூரி | 152 |
| | | இணைப்புக் கல்லூரி | 191 |
| 3 | 2023-2024 | உறுப்புக் கல்லூரி | 172 |
| | | இணைப்புக் கல்லூரி | 201 |
| 4 | 2024-2025 | உறுப்புக் கல்லூரி | 143 |
| | | இணைப்புக் கல்லூரி | 200 |
| | | மொத்தம் | 1355 |

***அரசாணை எண். 63ன்** படி அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்புவரை பயின்று, 7.5% இட ஒதுக்கீட்டின் மூலம் தொழிற்க் கல்வி சேரும் மாணவ,மாணவிகளுக்கு கல்விக் கட்டணம், விடுதிக்கட்டணம் மற்றும் கலந்தாய்வுக் கட்டணம் ஆகியவற்றை அரசாங்கம் வழங்குகிறது.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

## புதுமைப்பெண் மற்றும் தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் பயன்பெற்றுக்கொண்டிருக்கும் மாணவ / மாணவிகளின் எண்ணிக்கை விவரங்கள்

புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் 2021-2022ஆம் கல்வியாண்டு முதல் 2024-2025 கல்வியாண்டு வரை மொத்தம் 2515 மாணவிகள் பயன் பெற்று வருகின்றனர்.

தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் 2021-2022ஆம் கல்வியாண்டு முதல் 2024-2025 கல்வியாண்டு வரை மொத்தம் 1603 மாணவர்கள் பயன் பெற்று வருகின்றனர்

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஆண்டு | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | புதுமைப்பெண்* | 2021-2022 முதல் 2024-2025 வரை | 2515 |
| 2. | தமிழ் புதல்வன்** | 2021-2022 முதல் 2024-2025 வரை | 1603 |
| | | மொத்தம் | 4118 |

***அரசாணை எண். 46ன் & 16ன்** படி அரசுப் / அரசு உதவிப் பெறும் (தமிழ் வழியில்) பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்புவரை பயின்று, மேற்படிப்பு சேரும் மாணவிகளுக்கு மாதம் ரூபாய் 1000/- வீதம் அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.

****அரசாணை எண். 47ன்** அரசுப் / அரசு உதவிப் பெறும் (தமிழ் வழியில்) பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்புவரை பயின்று, மேற்படிப்பு சேரும் மாணவர்களுக்கு மாதம் ரூபாய் 1000/- வீதம் அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

### **முதல் தலைமுறைப் பட்டதாரி** மாணவர்களின் எண்ணிக்கை விவரங்கள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 2021-2022ஆம் கல்வியாண்டு முதல் 2024-2025 கல்வியாண்டு வரை மொத்தம் 21554 மாணவர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

| வ. எண் | ஆண்டு | கல்லூரி | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 2021-2022 | உறுப்புக் கல்லூரி | 1796 |
| | | இணைப்புக் கல்லூரி | 3455 |
| 2 | 2022-2023 | உறுப்புக் கல்லூரி | 2061 |
| | | இணைப்புக் கல்லூரி | 3531 |
| 3 | 2023-2024 | உறுப்புக் கல்லூரி | 2200 |
| | | இணைப்புக் கல்லூரி | 3118 |
| 4 | 2024-2025 | உறுப்புக் கல்லூரி | 1968 |
| | | இணைப்புக் கல்லூரி | 3425 |
| | | மொத்தம் | 21554 |

***அரசாணை எண். 85ன்** படி அரசு / அரசு உதவிபெறும் மற்றும் தனியார் தொழிற்கல்லூரிகளில் ஒற்றைச் சாளர கலந்தாய்வின் மூலம் சேர்க்கைப்பெறும் முதல் பட்டதாரி மாணவர்கள்- கல்விக் கட்டணச் சலுகை வழங்கப்படும்.